செ.வெ.எண்:38 நாள்:30.06.2019

**கரூர் மாவட்டம்**

**குழந்தைகள் ஆரோக்கிமாக இருந்தால் அவர்களின் மனதும் வளர்ச்சியும் நன்றாக இருக்கும் - ஓ.ஆர்.எஸ். கரைசல் மற்றும் துத்தநாக மாத்திரைகள் அரசு மருத்துவமனைகளில் இலவசமாக வழங்கப்படுகிறது - குழந்தைகளுக்கு ஏற்படும் வயிற்றுப்போக்கை கட்டுப்படுத்துதல் தொடர்பாக மருத்துவ முகாமினை துவக்கி வைத்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் பேச்சு**

அதன் விபரம் வருமாறு:

கரூர் மாவட்ட பொது சுகாதாரத்துறை சார்பாக 0 முதல் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு ஏற்படும் வயிற்றுப்போக்கை கட்டுப்படுத்துதல் தொடர்பாக தீவிர விழிப்புணர்வு இரு வார முகாமினை இன்று(30.05.2019) கரூர் நகராட்சிக்குட்பட்ட கஸ்தூரிபாய் தாய்சேய் நலவிடுதியில் மாவட்ட ஆடசித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் துவக்கி வைத்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:

குழந்தைகளை பெற்றோர்கள் பேணிபாதுகாக்க வேண்டும். குறிப்பாக குழந்தைகள் வயிற்றுப்போக்கால் பாதிக்கப்படாத அளவிற்கு அவர்களை கவனித்துக்கொள்ள வேண்டும். உள்ளங்கை மற்றும் விரல்களை சுத்தம் செய்தல், உள்ளங்கைகளின் பின்புறம் கழுவுதல், விரல் இடுக்குகளை சுத்தம் செய்தல், மேல் விரல்களை சுத்தம் செய்தல், விரல் நுனிகளை சுத்தம் செய்தல், மணிக்கட்டுகளை சுத்தம் செய்தல் போன்ற பழக்கங்களை குழந்தைகளுக்கு கற்றுக்கொடுப்பது மட்டுமன்றி பெரியவர்களும் பின்பற்ற வேண்டும்.

சுத்தமாக கை கழுவும் பழக்கத்தை பின்பற்றுவதால் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளில் நிமோனியா காய்ச்சல் பரவும் விகிதம் சுமார் 50சதவீத அளவில் குறைந்துள்ளது என்றும், 15 வயதிற்குட்பட்ட குழந்தைகளில் வயிற்றுப்போக்கு நோய் பரவும் விகிதம் சுமார் 53சதவீத அளவில் குறைந்துள்ளது என்றும், சொரி சிரங்கு பரவுதல் விகிதம் 34 சதவீத அளவில் குறைந்தது என கண்டறியப்பட்டது.

குழந்தைகளுக்கு ஆறு மாதங்களுக்கு தாய்ப்பால் மட்டுமே ஊட்டுதல் மற்றும் இரண்டு வயது வரை இணை உணவுடன் தாய்ப்பால் கொடுப்பது, சரியான ஊட்டச்சத்துக் கொடுப்பது, கைகளை முறையாக சோப்பு கொண்டு கழுவுவது, சுற்றுப்புற சுகாதாரத்துடன் சுத்தமான குடிநீர் அருந்துதல் போன்றவற்றின் மூலம் வயிற்றுப்போக்கு வராமல் தடுக்கலாம் என்பதனை அனைத்து தாய்மார்களும் தெரிந்துகொண்டு அவற்றை கடைபிடிக்க வேண்டும்.

இன்று துவங்கிய இந்த சிறப்பு முகாம் 08.06.2019 வரை நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது. வயிற்றுப்போக்குள்ள குழந்தைகளுக்கு ஓ.ஆர்.எஸ். கரைசல் மற்றும் துத்தநாக மாத்திரைகளை 14 நாட்களுக்கு வழங்குவதன் மூலம் நீர்ச்சத்துக் குறைவதை தடுப்பதுடன் உயிரிழப்புகளை நேர்வதை சுலபமாக தவிர்க்கலாம். இந்த ஓ.ஆர்.எஸ். கரைசல் மற்றும் துத்தநாக மாத்திரைகள் கரூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து அங்கன்வாடி மையங்கள், துணை சுகாதார நிலையங்கள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் இலவசமாக வழங்கப்படுகிறது.

வயிற்றுப்போக்கை கட்டுப்படுத்துதல் பற்றிய விழிப்புணர்வு பிரசாரங்கள், ஸ்டிக்கர், சுவரொட்டிகள், போஸ்டர்கள் மாவட்டம் முழுவதும் அனைத்து மையங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மருத்துவமனை அலுவலர்களுக்கும் மற்றும் செவிலியர்களுக்கும் மற்றும் அங்கன்வாடி பணியாளர்களுக்கும் தீவிர வயிற்றுப்போக்கை கட்டுப்படுத்துதல் பற்றிய விழிப்புணர்வு பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது.

வயிற்றுப்போக்கு கட்டுப்படுத்துதல் தீவிர முகாம்களில் பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துத்துறை, சமூக நலத்துறை, சத்துணவு திட்டத்துறை மற்றும் பள்ளிக்கல்வித்துறைகளைச் சார்ந்த 2000-த்திற்கும் மேற்பட்ட பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும் மாவட்டத்தில் உள்ள அனைத்து அங்கன்வாடி மையங்கள், துணை சுகாதார நிலையங்கள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை குழந்தைகள் பிரிவு ஆகிய இடங்களில் போதுமான அளவிற்கு இருப்பில் வைக்கப்பட்டுள்ளது. எனவே தாய்மார்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் இந்த விழிப்புணர்வு முகாம்களில் கலந்துகொண்டு பயன்பெறவேண்டும்.

குழந்தைகள் ஆரோக்கியமாக இருந்தால் அவர்களின் மனதும், வளர்ச்சியும் நன்றாக இருக்கும். எனவே, பெற்றோர்கள் அனைவரும் குழந்தைகளின் ஆரோக்கியத்தில் தனிக்கவனம் செலுத்த வேண்டும். இவ்வாறு தெரிவித்தார்.

முன்னதாக, வயிற்றுப்போக்கினால் ஏற்படும் தீமைகள் குறித்தும், அவற்றை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்தும், ஓ.ஆர்.எஸ். கரைசல் மற்றும் துத்தநாக மாத்திரைகளின் முக்கியத்துவம் குறித்தும் பொதுமக்களுக்கு சுகாதாரத்துறை மருத்துவர்கள் விரிவாக எடுத்துரைத்தனர். பின்னர், அங்கிருந்த குழந்தைகளுக்கு ஓ.ஆர்.எஸ் கரைசல் மற்றும் துத்தநாக மாத்திரைகளை மாவட்ட ஆட்சியர் வழங்கினார். பின்னர் கஸ்தூரிபாய் தாய்சேய் நலவிடுதியில் பெண்குழந்தையை ஈன்றிருந்த பெண்மணிக்கு தமிழக அரசின் “அம்மா குழந்தைநல பரிசு பெட்டகத்தையும் மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் சுகாதாரத்துறை துணை இயக்குநர் மரு.நிர்மல்சன், நகராட்சி சுகாதார அலுவலர்த மரு.பிரியா உள்ளிட்ட அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.